பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 215

திங்கட்கிழமை
30 ஜூன் 2025

ஆனி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## தமிழக மீனவர்கள் கைது

கொழும்பு, ஜூன் 30
தலைமன்னார் கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட

11

## முதியவர் சடலமாக மீட்பு

யாழ்., ஜூன் 30
வீட்டில் தனித்து வாழ்ந்த முதியவர் ஒருவர் சடலமாக மீட்கப்

11


# செம்மணியில் இதுவரையில் 33 என்புத் தொகுதிகள்!

### புத்தகப்பை, ஆடை, வளையலுடன் சிறுகுழந்தையின் என்பு நேற்று அடையாளம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

செம்மணி – சித்துப்பாத்தி இந்துமயானத்தில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், நேற்றும் மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. என்புத் தொகுதி ஒன்றுக்கு அருகில் ஆடை, சிறிய வளையல்கள், ஆங்கில எழுத்துகள் பொறிக்கப்பட்ட துணியிலான புத்தகப்பை ஒன்றும் அடையாளம் காணப்பட்டுள்ளன. அகழ்வுப் பணிகளில் தற்போதுவரை 33 மனித என்புத் தொகுதிகள் இனங்காணப்பட்டுள்ளன.

10



## கல்வி மேம்பாட்டுக்கு உலக வங்கி ஆதரவு

விரிவு பக்:- 05

## புதைகுழி ஆய்வுகளுக்காக இலங்கையில் ஆய்வகம்

### ஐ.நா.விடம் இலங்கை கோரிக்கை

கொழும்பு, ஜூன் 30
செம்மணிப் புதைகுழி உட்பட மனிதப் புதைகுழிகள் தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்படும். இது தொடர்பில் இலங்கையில் ஆய்வகமொன்றை அமைப்பதற்கு உதவவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரி

11



## காரில் கஞ்சா வியாபாரம்; யுவதி உட்பட இருவர் கைது

முல்லைத்தீவு, ஜூன் 30
சொகுசுக் காரில் கஞ்சா உட்பப் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் யுவதி உட்பட இருவர் புதுக்குடியிருப்புப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்

11

## அடாத்தாக காணிகளை பறித்தே கீரிமலை ஜனாதிபதி மாளிகை!

### ஒப்புக்கொள்கின்றார் அமைச்சர்

கொழும்பு, ஜூன் 30
கீரிமலையிலுள்ள ஜனாதிபதி மாளிகை பொதுமக்களின் இடங்களைக் கைப்பற்றிச் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ளது என்று வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் அநுர கருணாதிலக்க

11

## வடக்கின் ராஜபக்ச எம்.ஏ.சுமந்திரனாம்

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க காட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 30
தெற்கில் ராஜபக்சக்கள் எவ்வாறு மதவாதம், இனவாதம் பேசி மக்களை ஏமாற்றினார்களோ, அதையே முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் செய்கின்றார். மக்களால் நிராகரிக்கப்பட்டவர் இப்போது மக்களை உசுப்பேற்றும் நடவடிக்கைகளை

10

## நெடுந்தீவுப் பிரதேசசபை: தமிழரசுக் கட்சிக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
நெடுந்தீவுப் பிரதேச சபைக்கான தவிசாளர், பிரதித் தவிசாளர் தெரிவு இன்று நடைபெறவுள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியைக் கைப்பற்

11




செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரி

## புலம்பெயர் நாடுகளிலும் போராட்டங்கள் ஆரம்பம்

விரிவு பக்கம்:- 11



## போதைப்பொருள் பழக்கத்தால் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், ஜூன் 30
போதைப்பொருள் பழக்கத்துக்கு அடிமையான 28 வயதான இளம் குடும்பஸ்தர் ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார். இவர் 3 பிள்ளைகளின் தந்தையாவார். புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த இந்த இளம் குடும்பஸ்தர் கடந்த 27 ஆம் திகதி சுகவீனமுற்ற நிலையில் தெல்லிப்பழை மருத்துவனையில் சேர்க்கப்பட்

11

## விபத்தில் மீனவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
வடமராட்சி கிழக்கு, நாகர்கோவில் கடற்கரைப் பகுதியில் நேற்று அதிகாலை நடந்த விபத்தில் காயமடைந்த மீனவர்

11

**முச்சந்தி முரளி**

'வெளிநாட்டுக்கு அனுப்பினாலே பொய் ரிப்போர்ட் செய்யினம் என்டால் இஞ்ச ஆய்வு செய்தால் என்னென்ன திருகுதாளம் செய்வினமோ, ஆர் கண்டது?'

## பெண்ணின் சாவில் மர்மம்; தருமபுரத்தில் மூவர் கைது

கிளிநொச்சி, ஜூன் 30
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறுப் பிரதேசத்தில் கடந்த 22ஆம் திகதி வயோதிபப் பெண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்த நிலையில், அந்தச் சம்பவம் தொடர்பில் மூன்று பேர்

11

## வடக்கில் எட்டு வலயங்களில் உலக வங்கியின் அபிவிருத்தி

யாழ்ப்பாணம், ஜூன் 30
உலக வங்கி வடக்கு மாகாணத்தில் 8 வலயங்களில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளது. யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 வலயங்களிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் 2 வலயங்களிலும், வடக்கின் ஏனைய மூன்று மாவட்டங்களிலும் தலா ஒரு

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**கொவிசெத** — திகதி 29.06.2025; சீட்டிழுப்பு இலக்கம் 4117; ஆங்கில எழுத்து X; வெற்றி இலக்கங்கள் 01 04 30 52; விசேட எழுத்து X

**ஹந்தஹன ராசி சுப பலன்** — திகதி 29.06.2025; சீட்டிழுப்பு இலக்கம் 1184; வெற்றி இலக்கினம் மிதுனம்; வெற்றி இலக்கங்கள் 22 25 28 29

**NLB ஜய** — திகதி 29.06.2025; சீட்டிழுப்பு இலக்கம் 0143; ஆங்கில எழுத்து W; வெற்றி இலக்கங்கள் 4 2 8 4

**மெகா பவர்** — திகதி 29.06.2025; சீட்டிழுப்பு இலக்கம் 2223; ஆங்கில எழுத்து Y; சுப்பர் இலக்கம் 19; வெற்றி இலக்கங்கள் 03 22 44 52

**மஹஜன சம்பத** — திகதி 29.06.2025; சீட்டிழுப்பு இலக்கம் 5875; ஆங்கில எழுத்து Q; வெற்றி இலக்கங்கள் 7 9 5 9 9 8

**தன நிதானய** — திகதி 29.06.2025; சீட்டிழுப்பு இலக்கம் 1905; ஆங்கில எழுத்து Q; வெற்றி இலக்கங்கள் 33 43 55 80; விசேட எழுத்து Q

**அத சம்பத** — திகதி 29.06.2025; சீட்டிழுப்பு இலக்கம் 0450; ஆங்கில எழுத்து Q; வெற்றி இலக்கங்கள் 5 9 9 8

# நாடு முழுவதிலும் 52 பாதாளக்குழுக்கள்

கொழும்பு, ஜூன் 30

**நாட்டில் மொத்தம் 52 பாதாளக்குழுக்கள் இயங்குகின்றன. இவற்றுள் அதிகமான குழுக்கள் மேல் மாகாணத்தில் இயங்குகின்றன என்று பொலிஸ் தரப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.**

இந்தக் குழுக்கள் அனைத்தும் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுவருகின்றன.

இந்தக் குழுக்கள் முன்பு ஒன்றாகச் செயற்பட்டன. பின்னர் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாகப் பிரிந்து செயற்படுகின்றன என்றும் பொலிஸ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாகவே அவர்கள் மோதிக்கொள்கின்றனர் என்று கூறும் பொலிஸார் போதைப் பொருள் வியாபாரம், கப்பம், கொள்ளை, ஒப்பந்தக் கொலை போன்ற குற்றச்செயல்களில் ஈடுபட்டுவரும் இவர்கள் தொடர்ச்சியாக கைதுசெய்யப்பட்டுவருகின்றனர்.

பாதாளக்குழுக்களை மொத்தமாக ஒழித்துக்கட்டும் நடவடிக்கையை முன்னெடுத்துள்ளோம் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

**சுபிரி தன சம்பத** — திகதி 29.06.2025; தினம் ஞாயிற்றுக்கிழமை; வெற்றி வாரம் 0583; ஆங்கில எழுத்து C; வெற்றி இலக்கம் 4 2 6 8 3 5

**Super Ball** — திகதி 29.06.2025; தினம் ஞாயிற்றுக்கிழமை; சீட்டிழுப்பு வாரம் 2849; ஆங்கில எழுத்து E; வெற்றி இலக்கம் 41 60 61 73

**சனிதா** — திகதி 29.06.2025; தினம் ஞாயிற்றுக்கிழமை; ஆங்கில எழுத்து O; வெற்றி இலக்கம் 15 19 20 57; வெற்றி வாரம் 5010

**SASIRI** — திகதி 29.06.2025; தினம் ஞாயிற்றுக்கிழமை; வெற்றி வாரம் 0715; வெற்றி இலக்கம் 40 41 48

**லக்ன ராசி** — திகதி 29.06.2025; தினம் ஞாயிற்றுக்கிழமை; துலாம்; வெற்றி இலக்கம் 29 36 46 51; சீட்டிழுப்பு வாரம் 4561

**KAPRUKA** — திகதி 29.06.2025; தினம் ஞாயிற்றுக்கிழமை; ஆங்கில எழுத்து U; சுப்பர் இலக்கம் 19; வெற்றி இலக்கம் 12 27 56 69; வெற்றி வாரம் 2025

**அத கோடிபதி** — திகதி 29.06.2025; தினம் ஞாயிற்றுக்கிழமை; ஆங்கில எழுத்து T; வெற்றி இலக்கம் 11 36 63 68; வெற்றி வாரம் 2675

## முன்னாள் அமைச்சர்கள் வீட்டு வாடகையில் ரூ.27 இலட்சம் நிலுவை

கொழும்பு, ஜூன் 30

முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் 43 பேர் 27 இலட்சம் ரூபா வீட்டு வாடகை செலுத்தவேண்டியுள்ளது என்று பொதுநிர்வாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மாதம் இறுதியில் இந்தத் தொகை அறவிடப்படும் என அமைச்சின் நிதி அதிகாரி ஜி.எச்.ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

இதை அறவிடுவதற்கான உரிய நடவடிக்கை சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் கூறினார்.

அதேபோல், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செலுத்தாமல் நிலுவையிலுள்ள நீர் மற்றும் மின் கட்டணங்கள் பற்றிய தகவல்களும் திரட்டப்படுகின்றன என்றும் அரச வட்டாரம் தெரிவித்துள்ளது. (ச-இ)

## கெஹலியவின் ஊழல் 'பென்ஸ்' கார் வாடகை மாதத்துக்கு ரூ. 240,000

கொழும்பு, ஜூன் 30

கெஹலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராக இருந்தபோது பென்ஸ் காரைப் பயன்படுத்தியதாகக் கூறி, இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக தனது பென்ஸ் காருக்கு 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாவை மாத வாடகையாகப் பெற்றார் எனக் கூறப்படுகின்றது.

இந்த மோசடி குறித்து இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணையகம் விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

இந்த பென்ஸ் காருக்கு சுகாதார அமைச்சிலிருந்து கெஹலியவின் நண்பர்களில் ஒருவரின் வங்கிக் கணக்கில் மாதாந்திரமாக குறித்த தொகை வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நபர் ஒவ்வொரு மாதமும் அந்தத் தொகையை கெஹலியவிடம் வழங்கியுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது. (ச-இ)

## இலங்கையில் பிரிவினையாம்

*சரத் வீரசேகர குமுறல்*



கொழும்பு, ஜூன் 30

இலங்கையில் சிங்கள இனத்துக்கே அநீதி இழைக்கப்பட்டுவருகின்றது. தமிழ்ப் பிரிவினைவாதிகளை மட்டுமே ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நாயகம் சந்தித்துள்ளார் என்று முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையென்பது சிங்கள, பௌத்த நாடாக இருந்தபோதிலும் பெரும்பான்மை இனமான சிங்கள மக்களுக்கே அநீதி இழைக்கப்படுகின்றது.

வடக்கில் 25 ஆயிரம் வரையிலான சிங்களக் குடும்பங்கள் இருந்தன. இன்று ஒருவர்கூட இல்லை. மட்டக்களப்பிலும் சிங்களவர்கள் இல்லை.

அதிகாரத்துக்காக தற்போதைய அரசாங்கம் பெரும்பான்மை இனத்தைக் காட்டிக்கொடுத்துள்ளது. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இராணுவ அமைப்பு மற்றும் தேசியவாத அமைப்புகளுடன் சந்திப்பு நடத்தவில்லை. தமிழ்ப் பிரிவினைவாதிகளை மட்டுமே சந்தித்தார். இரு தரப்புகள் இருப்பதை அரசாங்கம் அவருக்கு சுட்டிக்காட்டியிருக்கவேண்டும் - என்றார். (ச-44)

## ஹெரோய்னுடன் கைதானோருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கோப்பாய் பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட இரு வேறு பகுதிகளில் ஹெரோய்ன் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் முற்படுத்தப்பட்டபோதே எதிர்வரும் 11ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ச-23)

## அரசியல்வாதிகளின் ஊழலில் குளிர்காய்ந்தோருக்கும் வலை!

கொழும்பு, ஜூன் 30

அரசியல்வாதிகள் ஊழல் மோசடிகளில் ஈடுபடுவதற்கு உதவியாக இருந்த அமைச்சின் செயலாளர்கள் உள்ளிட்ட அரச உயர் அதிகாரிகள் 18 பேர் தொடர்பில் சி.ஐ.டி. மற்றும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளைத் தொடங்கியுள்ளன.

அவர்களுள் ஐவர் வெளிநாடுகளில் உள்ளனர் என்றும் அவர்களை நாட்டுக்கு அழைத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

இவ்வாறு அரசியல்வாதிகளின் ஊழலுக்குத் துணைபோன இந்த 18 அதிகாரிகள் அதனூடாக அதிக நன்மையடைந்துள்ளனர் என்று அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன..

இந்த மோசடியின் மூலம் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான வாகனங்கள்,நிலங்கள் மற்றும் கட்டடங்களை அவர்கள் கொள்வனவு செய்தமை தொடர்பில் தமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (ச-75)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கரையொதுங்கிய பிளாஸ்ரிக் துகள்கள்

# மீட்புப்பணிக்கு நிதியுதவி கப்பல் நிறுவனம் ஒப்புதல்

யாழ்ப்பாணம், ஜுன் 30

**யாழ்.மாவட்டக் கடற்கரைப் பகுதிகளில் கரையொதுங்கும் பிளாஸ்ரிக் துகள்களை அப்புறப்படுத்தும் பணிகளுக்கு நிதியுதவியை வழங்குவதாக கேரளக் கடற்பரப்பில் விபத்துக்குள்ளான கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.**

கடந்த மே மாதம் 25ஆம் திகதி 'MSC ELSA 3' என்ற கப்பல் கேரளாவின் கொச்சிக்கு அருகில் விபத்துக்குள்ளாகி மூழ்கியது. இதிலிருந்த 640 கொள்கலன்களில் 13 கொள்கலன்களில் பிளாஸ்ரிக் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகின்ற அபாயகர மூலப்பொருள்கள் காணப்பட்டன. இந்த விபத்தால் கடலில் கலந்த எண்ணெய்க் கசிவு மற்றும் பிளாஸ்ரிக் துகள்கள் தென் ஆசியக் கடற்பரப்பிலும், குறிப்பாக இலங்கைக் கடற்கரைப் பகுதிகளிலும் கரையொதுங்கிவருகின்றன. யாழ். மாவட்டத்தில் இதுவரை ஆயிரத்து 400 உரைப்பை மூடைகளில் பிளாஸ்ரிக் துகள்கள் மீட்கப்பட்டன. இந்தநிலையில் இலங்கைக் கடற்பரப்பில் ஒதுங்கும் பிளாஸ்ரிக் துகள்களின் மீட்புப் பணிகளுக்குத் தாம் நிதியை வழங்குவதாக கடலில் மூழ்கிய கப்பலின் நிறுவனம் தெரிவித்துள்ளது என வடமாகாண கடல் சூழல் சார் பாதுகாப்பு அதிகார சபையின் பிராந்திய முகாமையாளர் சிறிப்பதி தெரிவித்துள்ளார். (ச-125)

## கசிப்புடன் நால்வர் கைது

புத்தூர் கிழக்கு விக்னேஸ்வரா மைதானத்துக்கு அருகில் 7.5 லீற்றர் கசிப்புடன் 4 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அச்சுவேலிப் பொலிஸார் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது அவர்கள் கைதாகினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். 45 தொடக்கம் 60 வயது இடைப்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்களை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-23)

## கைதிகளின் சட்டவிரோத விடுதலை; விசாரிப்பதற்கு விசேட ஆணைக்குழு

கொழும்பு, ஜுன் 30

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ் சட்டவிரோதமானமுறையில் கைதிகள் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் விசாரிப்பதற்காக விசேட விசாரணைக் குழுவொன்றை அமைக்குமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதி அமைச்சிடம் கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளது. சில நாள்களுக்கு முன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பொதுமன்னிப்பின்கீழ் கைதிகள் பலர் விடுதலை செய்யப்பட்டனர். அவ்வாறு விடுதலை செய்யப்படும் கைதிகளின் பெயர்ப்பட்டியலில் உள்ளிப்படாத சிலரும் சட்டவிரோதமானமுறையில் விடுதலை செய்யப்பட்டனர். இத்தகைய சம்பவங்கள் இதற்கு முன்பும் இடம்பெற்றன என்று தகவல்கள் வெளியாகின. இதனையடுத்தே இது தொடர்பில் விரிவான விசாரணை நடத்துவதற்காக விசேட விசாரணைக் குழுவொன்றை அமைக்குமாறு நீதி அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. (ச-75)



## அரச தலைவர்கள் வீடு இனி சுற்றுலாத்தலம்!

கொழும்பு, ஜுன் 30

கடந்த காலங்களில் அரச தலைவர்கள் உத்தியோகபூர்வ இல்லமாகப் பாவிக்கப்பட்ட 'விசும்பாய' இல்லத்தை சுற்றுலாத்தலமாகப் பாவிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளது. இதற்கான அடிப்படை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் கலாநிதி அனுர கருணாதிலக தெரிவித்துள்ளார். கடந்த காலங்களில் இந்தக் கட்டடத்தை சிறிமாவோ பண்டாரநாயக்க, தி.மு. ஜயரத்ன, லக்ஸ்மன் கதிர்காமர், அனுருத்த ரத்வத்த மங்கள சமரவீர மற்றும் ஜி.எல். பீரிஸ் ஆகிய அரச தலைவர்கள் உத்தியோகபூர்வ இல்லமாகப் பாவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-75)

### வங்குரோத்தால் நஷ்டம்

## ரூ.4,000 கோடி இழப்பீடு நிறுவனங்கள் கோரல்

கொழும்பு, ஜுன் 30

2022 ஏப்ரல் 12ஆம் திகதி இலங்கை வங்குரோத்து அடைந்த நாடாக அறிவிக்கப்பட்டதால் அபிவிருத்தித் திட்டங்கள் பல இடைநிறுத்தப்பட்டன. இதனால் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்வதற்காக ஒப்பந்த நிறுவனங்கள் பல தற்போதைய அரசிடம் 4 ஆயிரம் கோடி ரூபாவை நஷ்ட ஈடாகக்கேட்டுள்ளன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்தக் கோரிக்கை நிதி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று அரச உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன. இந்த நிர்மாணப் பணிகளில் ஈடுபட்ட சீனாவின் எம்.சி.சி .நிறுவனம், ஜப்பானின் தாய்சே நிறுவனம் மற்றும் இலங்கையின் எக்ஸஸ் நிறுவனம் போன்றவையே இந்த நஷ்ட ஈட்டைக் கோரியுள்ளன. (ச-75)



## தேசியப்பட்டியலில் ரில்வின்

கொழும்பு, ஜுன் 30

மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வாவுக்குத் தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்ற உறுப்புரிமை வழங்கப்படவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

தேசிய மக்கள் சக்தியின் தேசியப்பட்டியல் ஊடாக நியமிக்கப்பட்ட ஹர்ஷன, நிதியமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்ட நிலையில் அண்மையில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்திருந்தார். இதனால் ஏற்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்துக்கு ரில்வின் சில்வா நியமிக்கப்படுவார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-இ)



## புதினம் தெரியுமோ?

### காா்ட் இருக்கு, காசு எங்க?

காற்றுள்ளபோதே தூற்றிக்கொள் எண்டு முந்தின ஆக்கள் சொன்னதை, இப்பத்தை பிள்ளையள் 'கார்ட்' உள்ளபோதே தூற்றிக்கொள் எண்டு பிழையா விளங்கிக்கொண்டு பிழையானவழியில போகத் தொடங்கிட்டாங்கள். கிட்டடியில வடமராட்சியில இருக்கிற ஒரு பள்ளிக்கூடத்துக்கு வழக்கமான மருத்துவச் சோதினைக்காக ஒரு சுகாதாரப் பரிசோதகர் போயிருக்கிறார். படிக்கிற பிள்ளையளுக்கு என்னென்ன குறைபாடுகள் இருக்கெண்டு கண்டுபிடிச்சு, அதுக்கேத்த சிகிச்சையளைச் செய்து அதுகளை மாத்துறதுக்குத்தான் இப்பிடி மருத்துவச் சோதினை செய்யிறவை. அந்த மருத்துவச் சோதினையளில கண்ணையும் 'செக்' பண்ணவேணும். கண்ணைச் செக் பண்ணேக்க ஒரு கண்ணை மூடிக்கொண்டு, மற்றக்கண்ணால முன்னுக்கு உள்ள எழுத்துகளையும், நம்பர்களையும் சரியாச் சொல்லோணும். பார்வைக்குறைபாடு இருந்தால் எல்லா எழுத்தையும், நம்பரையும் சரியாச் சொல்லேலாது. அதைவைச்சு என்ன குறைபாடு எண்டு கண்டுபிடிப்பினம்.

இந்தச் சுகாதாரப் பரிசோதகர் பிள்ளையளின்ர கண்ணை வடிவா மூடுறதுக்காக தன்ர ஏ.ரி.எம். கார்ட்டை வகுப்பு மொனிட்டரிட்ட குடுத்திருக்கிறார். மொனிட்டர் எல்லாப் பிள்ளையளின்ரையும் ஒரு கண்ணை இந்த ஏ.ரி.எம். கார்ட்டால மூட, சுகாதாரப் பரிசோதகர் காட்டுற எழுத்தையும், நம்பரையும் பிள்ளையள் சொல்லிமுடிச்சினம். இதெல்லாம் நல்லபடியா நடந்துமுடிஞ்சு, சுகாதாரப் பரிசோதகர் வீட்டை வெளிக்கிட்டிருக்கிறார். அவர் போகேக்குள்ளை போனில அடிக்கடி மெசெஜ் வாற சத்தம் கேக்க, அவர் அதைப் பெரிசா எடுக்கேலை. வீட்டை போய் போனைப் பார்த்தவருக்கு கரண்ட் அடிச்சமாதிரி அதிர்ச்சி. அவரின்ர எக்கவுண்டில இருந்த காசில அம்பாதாயிரத்துக்குக் கிட்ட வெட்டுப்பட்டிருக்கு. அதுவும் 3500 ரூபா அப்பிடிக் கனதரம் கொஞ்சநேரத்துக்க காசு வெட்டுப்பட, சுகாதாரப் பரிசோதகர் தன்ர வங்கியின்ர 'ஹொட்லைனுக்கு 'அடிச்சு , 'நான் காசு எடுக்கேலை. ஆனால் 50 ஆயிரம் ரூபா வெட்டுப்பட்டிருக்கு' எண்டு முறைப்பாடு செய்திருக்கிறார்.. ஹொட்லைன்காரரும் செக் பண்ணிப்போட்டு 'உங்கட பிள்ளை போனில ஏதோ ஹேம் விளையாடுறார் . உடன போனைப் பறியுங்கோ' எண்டிருக்கினம். அதுக்கு அவர் 'அவை போன் பாவிக்கிற அளவுக்கு வளரேலை சின்னப்பிள்ளையள்' எண்டு சொல்லியிருக்கிறார். அதுக்கு 'அப்ப வேற ஆரிட்டையும் உங்கட ஏ.ரி.எம். கார்ட்டை இண்டைக்கு குடுத்தனீங்களோ? எண்டு கேட்டிருக்கினம். இவரும் யோசிச்சுப் பார்த்திட்டு 'இண்டைக்குப் பள்ளிக்கூடப் பிள்ளையளுக்குக் குடுத்தன்' எண்டிருக்கிறார். ' அப்ப அவைதான் போனில கேம் விளையாட உங்கட கார்ட்டைப் பாவிச்சுக் காசு கட்டியிருக்கினம்' எண்டு குண்டைத் தூக்கிப் போட்டிருக்கினம்.

இதைக் கேட்டவுடன சுகாதாரப் பரிசோதகருக்கு அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டுப் போட்டுது. முதல் வேலையா தன்ர ஏ.ரி.எம். கார்ட்டை புளொக் பண்ணிப்போட்டார். இல்லாட்டி முழுக்காசும் வெட்டுப்பட்டிருக்கும். எப்பிடி கார்ட் இவரிட்ட இருக்க அந்தப் பள்ளிக்கூடப் பெடியள் பழம் இருக்க சுளை விழுங்கினாங்கள்? சுகாதாரப் பரிசோதகருக்குக் காசு திரும்பக் கிடைச்சிட்டுதா, இல்லையா? எல்லாத்தையும் நாளைக்குப் பட்சி சொல்லும்.

– பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)



**மேடம்:** கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த கருத்துவேறுபாடு நீங்கி, அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவுசெய்ய நேரும். வயிறு தொடர்பான பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால், வெளியில் சாப்பிடுவதைத் தவிர்க்கவும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்கவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு வீண்செலவுகள் ஏற்படக்கூடும். வாழ்க்கைத்துணையின் தேவையைப் பூர்த்திசெய்வீர்கள்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத் துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். கொடுத்த கடன் திரும்பக் கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கிய முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுபநிகழ்ச்சிகளுக்கான பேச்சுவார்த்தை சாதகமாகமுடியும்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதாக இருந்தால் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். சிறிய அளவில் உடல் நலம் பாதிக்கப்பட்டாலும், எளிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும். உறவினர்களுடன் கருத்துவேறுபாடுகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமை அவசியம்.

**கும்பம்:** மகிழ்ச்சிதரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள்.

**மீனம்:** உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாகமுடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர்ச்செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.





# வன்னியின் பெரும் சமர் சமநிலையில் நிறைவு

கிளிநொச்சி, ஜூன் 30

கிளிநொச்சி மகாவித்தியாலய அணிக்கும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிக்குமிடையிலான 14ஆவது வன்னியின் பெரும் சமர் சமநிலையில் நிறைவடைந்துள்ளது. இந்தப் போட்டி நேற்றுமுன்தினமும் நேற்றும் கிளிநொச்சி மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது. முதலாவது இனிங்சில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி அனைத்து இலக்குகளையும் இழந்து 171 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்கு முதலாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 183 ஓட்டங்களுக்கு அனைத்து இலக்குகளையும் இழந்தது. பதிலுக்குத்தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி 40ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்தநிலையில் இரண்டாவது நாள் ஆட்டம் நிறைவுக்கு வருவதாக நடுவர் அறிவிக்க 14 ஆவது வன்னியின் பெரும் சமர் சமநிலையில் நிறைவடைந்தது.

ஆட்டநாயகனாக கிளிநொச்சி மகாவித்தியாலய அணி வீரர் கி.கிருஸ்ணமேனன், சிறந்த பந்து வீச்சாளராக கிளிநொச்சி மகாவித்தியால அணி வீரர் இ.விதுரன், சகலதுறை வீரனாக கிளிநொச்சி மகாவித்தியாலய அணி வீரர் கி.கிருஸ்ணமேன், சிறந்த களத்தடுப்பாளராக புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணிவீரர் சு.டிலக்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். பரிசளிப்பு நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரசாங்கதிபர் எஸ்.முரளிதரன் கலந்துகொண்டார். இதேவேளை இதுவரை நடைபெற்ற 14 போட்டிகளில் கிளிநொச்சி மகாவித்தியாலயம் நான்கு போட்டியில் வெற்றி பெற்றிருப்பதுடன் ஒரு போட்டியில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி அணி வெற்றிபெற்றுள்ளதுடன் ஒன்பது போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-113)



# குருதிக்கொடையாளர் யாழில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30

2025ஆம் ஆண்டுக்கான உலகக் குருதிக்கொடையாளர் தினத்தை முன்னிட்டு யாழ்.போதனா மருத்துவமனையின் பிராந்திய இரத்த வங்கியின் ஏற்பாட்டில் குருதிக்கொடையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், சிறப்பு விருந்தினர்களாக யாழ்.போதனா மருத்துவமனையின் உளநல மருத்துவ நிபுணர் சி.சிவதாஸ், கொழும்புத்துறை புனித சவேரியார் குருமட முதல்வர் அருட்தந்தை கலாநிதி.ஜ.ரி. தயாபரன், பலாலி 4ஆவது மருத்துவப் படைப்பிரிவின் இராணுவத் தலைமையதிகாரி மேஜர் அனுருத்த லேகம்கே, கௌரவ விருந்தினராக யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோர் கலந்துகொண்டனர். நிகழ்வில் வடக்குமாகாணத்தைச் சேர்ந்த 90 குருதிக்கொடையாளர்கள், 25 குருதிக்கொடை முகாம் ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் உதயன் பத்திரிகை நிறுவனத்தில் வருடாந்தம் நவம்பர் மாதம் 27ஆம் திகதி குருதிக்கொடை முகாம் நிகழ்வைச் சிறப்பாக ஒழுங்கமைத்து நடத்துவதற்காக உதயன் பத்திரிகையின் ஆசிரியர் த.பிரபாகரன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. (ச-41-66)

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

அருள்மிகு கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்த சுவாமி தேவஸ்தான மஹோற்சவப் பெருவிழா கடந்த வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும், செவ்வாய்க்கிழமை சப்பறத் திருவிழாவும், புதன்கிழமை தேர்த்திருவிழாவும், வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும், வெள்ளிக்கிழமை திருக்கல்யாண உற்சவமும் இடம் பெறவுள்ளன. (ச-22,159)



# விழிப்புணர்வு நடைபவனி

யாழ்ப்பாணம், ஜூன் 30

அச்சுவேலி மத்திய கல்லூரி பாடசாலைச் சமூகத்தின் போதைப்பொருள் ஒழிப்புத் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடைபவனி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. நிகழ்வில் கல்லூரி முதல்வர் நா. மகேந்திரராஜா, பிரதி அதிபர் திருமதி ராஜி துரேஸ்ராம், பாடசாலை ஆசிரியர் குழு, மாணவர்கள் ஆகியோர் இணைந்திருந்தனர். (ச-41)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




நாளொரு நல்வார்த்தை

வெற்றியானது ஆர்வம், மனதை ஒருமுகப்படுத்தல், விடாமுயற்சி மற்றும் சுயமதிப்பீடு ஆகியவற்றிலிருந்து வருகிறது.

–அல்பேர்ட் ஐன்ஸ்டீன் –


## நல்லூர் நல்லதொரு முன்னுதாரணம்

2026ஆம் ஆண்டு தொடக்கம் நல்லூர்ப் பிரதேசசபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் உணவுப்பொதி செய்யவும், உணவுகளைப் பரிமாறவும் பயன்படுத்தப்படும் பொலித்தீன் தாள்களின் பாவனைக்குத் தடைவிதிக்கும் தீர்மானத்தை அந்தப் பிரதேசசபை நிறைவேற்றியுள்ளது. நல்லூர்ப் பிரதேசசபையின் இந்தத் தீர்மானமானது, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான ஒரு முக்கியமான முன்னெடுப்பாகும். இந்த முடிவு பொலித்தீனால் ஏற்படும் மாசுபாட்டின் தீவிரத்தை உணர்ந்து எடுக்கப்பட்டுள்ளது. சபையின் உப தலைவர் இ.ஜெயகரனால் முன்வைக்கப்பட்ட இந்த முன்மொழிவு, உறுப்பினர்களின் ஒருமித்த ஆதரவைப் பெற்று நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகள் எமது சமூகத்தின் நீண்டகால நலனுக்கு உதவுவன.

இந்தப் பொலித்தீன் தாள்களை ஒருமுறை மட்டுமே பயன்படுத்திவிட்டு பின்னர் எறிந்துவிடுகின்றோம். அவை மிகமெல்லியவை என்பதால் மிக எளிதாக காற்றில் மிதந்து, எம் சூழலெங்கும் பரந்து பரவிவிடுகின்றன. இந்தப் பொலித்தீன் தாள்கள் சாகாவரம் பெற்றவை. அவை சிதைவடைய பல நூற்றாண்டுகள் ஆகும். மண்ணின் வளத்தைக் குறைப்பது, நீர் ஆதாரங்களை மாசுபடுத்துவது, விலங்குகள் மற்றும் கடல் உயிரினங்களுக்கு ஆபத்து விளைவிப்பது போன்ற பல தீய விளைவுகளை அப்பாவிகள்போல இருக்கும் இந்தப் பொலித்தீன் தாள்கள் ஏற்படுத்துகின்றன. அப்படியானால் அவற்றை எரிக்கலாம்தானே? என்று சிலர் சிந்திக்கக்கூடும். அங்கும் இருக்கிறது ஆபத்து. இந்தப் பொலித்தீன் தாள்கள் எரிக்கப்படும்போது வெளியாகும் நச்சுப்புகைகள் மனிதர்களுக்கு சுவாசம் சம்பந்தமான பலவித நோய்களைப் பரிசாகத் தந்துவிடுகின்றன. இத்தகைய காரணங்களால், பொலித்தீன் தாள்களின் பயன்பாட்டை இயன்றளவு குறைப்பது அவசியமாகிறது.

இந்தப் பாதகங்களை உணர்ந்தே, நல்லூர்ப் பிரதேசசபை ஒரு முன்னுதாரண நடவடிக்கையாக பொலித்தீன் தாள்களை அடுத்த வருடத்தில் இருந்து பயன்படுத்தமுடியாது எனத் தடைபோட்டிருக்கிறது. நல்லூரைப் பின்பற்றி நாடு முழுவதும் உள்ளூராட்சிசபைகளும் இந்தப் பொலித்தீன் தாள் கலாசாரத்துக்கு சாவுமணியடிக்க முன்வரவேண்டும். பொலித்தீன் தாள்களுக்கு மாற்றுப்பொருள்களாக வாழை இலை, தாமரை இலை, கமுகம் தட்டு, பனையோலை போன்ற சூழல் நலப் பொருள்களைப் பயன்படுத்த ஊக்குவிக்கப்படவேண்டும். அத்தோடு வெறுமனே தீர்மானத்தோடு இந்தத்தடையை மட்டுப்படுத்தாமல், அதனை சரியானவகையில் நடைமுறைப்படுத்தினாலேயே உரியபலன் கிடைக்கும். எனவே, உணவகங்கள், திருமண மண்டபங்கள் மற்றும் சில்லறை வியாபாரிகள்மீது கண்காணிப்பையும் கடுமையாக்கவேண்டும். மக்களும் இந்த மாற்றத்தை ஏற்றுக்கொள்ளும்வகையில், பொலித்தீன் தாள்களின் தீமையையும், வாழையிலை போன்ற மாற்றுப்பொருள்களின் நன்மையையும் வெளிப்படுத்தும்வகையிலான விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தவேண்டும்.

நல்லூர்ப் பிரதேசசபையின் இந்த முயற்சி, சுற்றுச்சூழல் பாதுகாப்பில் ஒரு புதிய தொடக்கமாகும். இதைப்போன்ற முயற்சிகள் வடக்கில் மட்டுமல்லாது நாடு முழுவதும் பரவவேண்டும். அதன்மூலம் பொலித்தீன் இல்லாத ஒரு சுத்தமான சூழல் கொண்ட ஆரோக்கியமான தேசம் தானாகவே உருவாகும்.




## கல்வி மேம்பாட்டுக்கு உலக வங்கி ஆதரவு




**கொழும்பு, ஜுன் 30**

**இலங்கை முழுவதும் சுமார் 5 இலட்சம் மாணவர்கள் மற்றும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ஆசிரியர்களுக்காக செயற்படுத்தப்பட்டுவரும் பொதுக்கல்வி நவீனமயமாக்கல் திட்டத்துக்கு 50 மில்லியன் டொலர் கூடுதல் நிதியை வழங்க உலக வங்கி அங்கீகரித்துள்ளது.**

இந்த நிதியுதவி, கல்விச் சீர்திருத்தங்களை சரியான பாதையில் கொண்டுசெல்வதற்கும், கற்பித்தல் தரத்தை மேம்படுத்துவதற்கும், பாடசாலை வசதிகளை மேம்படுத்துவதற்கும், மாணவர் நல்வாழ்வை மேம்படுத்துவதற்கும் உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மேலும் பணியிட ஆசிரியர் கல்வியை நவீனமயமாக்குவதற்கும், தொடர்ச்சியான ஆசிரியர் மேம்பாட்டினால் ஆசிரியர் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும், டிஜிற்றல் கற்றலில் வலுவான கவனம் செலுத்துவதற்கும் உதவும் என்று உலக வங்கி தெரிவித்துள்ளது.

பாடசாலை சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துத் திட்டத்தை ஆதரிப்பது ஆகியவை ஆரோக்கியத்தையும் நல்வாழ்வையும் வலுப்படுத்தும் என்றும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (ச-இ)

## நாளை முதல் டெங்கு ஒழிப்பு



கொழும்பு, ஜுன் 30

டெங்கு மற்றும் சிக்கன் குனியா நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தும்வகையில் இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 6 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. 16 மாவட்டங்களை இலக்காகக் கொண்டு இந்த வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுமென சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார். (ச-இ)

## போதைப்பொருள்கள் இரு மாதங்களில் 1,758 கிலோ மீட்பு

கொழும்பு, ஜுன் 30

கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்ட ஆயிரத்து 758 கிலோகிராம் ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. இதன்போது 25 சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.


கைப்பற்றப்பட்ட ஹெரோய்ன் போதைப்பொருளின் மதிப்பு 10.84 பில்லியன் ரூபா என்றும், ஐஸ் போதைப்பொருளின் மதிப்பு ரூ.12.16 பில்லியன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)



## ஹெரோய்னுடன் இருவர் கைது

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 80 மில்லிகிராம் ஹெரோய்னுடனும், 100 மில்லிகிராம் ஹெரோய்னுடனும் இரு இளைஞர்கள் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட இருவரையும் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர். (ச-20-26)




## 'லைசென்ஸ்' அட்டை கையிருப்பு வீழ்ச்சி

சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளின் கையளிப்பு வீழ்ச்சியடைந்துள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது. சாரதி அனுமதிப்பத்திர அட்டைகளின் பற்றாக்குறை காரணமாக கடந்த காலத்தில் சாரதி அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதில் பெரும் சிக்கல் ஏற்பட்டிருந்தது. அதனைநிவர்த்திசெய்யும்வகையில் சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்கான அட்டைகள் சுமார் பத்து இலட்சம் அளவில் அண்மைக் காலத்தில் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் சுமார் ஒன்பது இலட்சம் அட்டைகள் தற்போதைக்கு அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன. இன்னும் ஒரு இலட்சம் அளவிலான அட்டைகளே கையிருப்பில் உள்ளன என்றும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ச-இ)



நாளை செவ்வாய்க்கிழமை - ஆனி 17 01.07.2025

சுபநேரம் : 10.26- 11.56
ராகுகாலம் : 02.56-04.26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கல்லுண்டாய்ப் பகுதிக்குள் திண்மக்கழிவைக் கொட்டாதே!

## மாநகரசபை வாகனங்களை வழிமறித்து நேற்றுப் போராட்டம்

**யாழ்ப்பாணம், ஜூன் 30**

**யாழ்ப்பாணம் மாநகரசபையின் கழிவகற்றும் வாகனங்களை மறித்து கல்லுண்டாய்ப் பகுதி மக்களும் மானிப்பாய் பிரதேசசபையின் உறுப்பினர்களும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

யாழ்ப்பாணம் மாநகரசபையினர் தமது எல்லைக்குள் சேகரிக்கும் மருத்துவக் கழிவு, மலக்கழிவு, பிளாஸ்ரிக் கழிவு, விலங்குக் கழிவு உட்பட பல கழிவுகளை மானிப்பாய் பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட கல்லுண்டாய்ப் பகுதிக்குள் கொட்டப்படுவதை நிறுத்தும்படி கோரி இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மாநகரசபைக் கழிவுகளை ஏற்றிவந்த உழவியந்திரங்கள் பல வழிமறிக்கப்பட்டன. மலக்கழிவை ஏற்றிவந்த மாநகரசபையின் வாகனம் ஒன்று திருப்பியனுப்பப்பட்டது. இதன்போது யாழ்ப்பாணம் மாநகரசபையின் உறுப்பினர் மயூரனுக்கும், கல்லுண்டாய் பகுதி மக்கள், மானிப்பாய் பிரதேசசபையின் உறுப்பினர்களான உஷாந்தன், வாசன் ஆகியோருக்குமிடையே வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் களத்தில் பொலிஸார் களமிறக்கப்பட்டு நிலைமை கட்டுப்படுத்தப்பட்டது. இதேவேளை கல்லுண்டாய் வெளிக் குப்பைமேட்டில் நேற்று முன்தினம் இரவு பெரும் தீ ஏற்பட்ட நிலையில் அந்தப் பகுதியில் வசித்து வந்த பல குடும்பங்கள் தங்கள் குழந்தைகள் சகிதம் வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சமடைந்தனர்.

இந்தத் தீ நேற்றுவரை எரிந்து கொண்டு இருந்ததுடன் வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் பயணிகளுக்கும் அண்டிய சூழலில் வசிக்கும் மக்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-27-20)

### வலி.மேற்குப் பிரதேசசபையின்

# திண்மக்கழிவகற்றலுக்கு ஒப்பந்த சுத்திகரிப்பாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் திண்மக்கழிவகற்றலுக்கு ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களை உள்ளீர்ப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. வலி. மேற்குப் பிரதேசசபையின் மாதாந்த அமர்வு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பிரதேசசபையின் தவிசாளர், வலிகாமம் மேற்குப் பிரதேசத்தில் திண்மக்கழிவகற்றல் செயற்பாட்டுக்கு பிரதேசசபையிடம் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுகின்றது. ஆகவே புதிதாக ஒப்பந்த அடிப்படையில் சுத்திகரிப்புத் தொழிலாளர்களை உள்ளீர்க்கவேண்டும். அதற்கமைய 5 சுத்திகரிப்புத் தொழிலாளர்களை உள்ளீர்போம் - என்றார். தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பிரதேசசபை உறுப்பினர்கள், 5 சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் எமக்குப் போதுமானதாக இருக்காது. ஆகவே எண்ணிக்கை அதிகரிக்கப்படவேண்டும் எனச் சுட்டிக்காட்டியநிலையில், 10 பேரை உள்ளீர்ப்பதற்கு ஆவனசெய்வோம் என்றும் இவர்கள் எதிர்காலத்தில் நிரந்தர நியமனங்களையும் பெறக்கூடும் என்றும் தவிசாளர் தெரிவித்தார். (ச-125)

### அனுமதியற்ற

# விளம்பரப்பலகைகள் வலி.தெற்கில் அகற்றல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் முதலாவது அமர்வில் நிறைவேற்றப்பட்ட பிரேரணைத் தீர்மானத்துக்கமைய பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் அனுமதியற்றவகையில் காணப்படும் சட்டவிரோத விளம்பரப்பலகைகளை அகற்றும் நடவடிக்கை நேற்றுமுன்தினம் சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் முதலாவது அமர்வில் தமிழரசுக்கட்சியின் பிரதேசசபை உறுப்பினர் வ.தனகோபி சட்டவிரோத விளம்பரப் பலகைகளை உடனடியாக அகற்றவேண்டும் என்ற பிரேரணையை முன்மொழிந்தார்.

அதற்கு உறுப்பினர்கள் அனைவரும் ஆதரவு வழங்கியநிலையில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

அதற்கமைய மருதனார்மடம் சந்தியில் சட்டவிரோதமானமுறையில் அமைக்கப்பட்டிருந்த ஆறு விளம்பரப்பலகைகள் வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் தவிசாளர் மற்றும் உறுப்பினர்களின் நேரடிக் கண்காணிப்பில் நேற்றுமுன்தினம் அகற்றப்பட்டன. (ச-22,66)



# ஓட்டோச் சாரதிகளுக்கு தெளிவூட்டல் செயற்பாடு

யாழ்ப்பாணம், ஜூன் 30

முச்சக்கரவண்டிச் சாதிகளுக்குத் தெளிவூட்டும் செயற்பாட்டுத்திட்டம் அச்சுவேலியில் நேற்று இடம்பெற்றது.

அச்சுவேலிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரியந்தவின் ஆலோசனைக்கு அமைய போக்குவரத்துப் பொலிஸாரால் தெளிவூட்டல் வழங்கப்பட்டது. முச்சக்கரவண்டிகளில் சந்தேகத்துக்கிடமான ஆட்களை ஏற்றிச்செல்லுதல், மதுபோதையில் வாகனம் செலுத்துதல், குற்றங்களுக்கு உடந்தையாக இருத்தல் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவது குறித்து விளக்கமளிக்கப்பட்டன. (ச-23)





# தையல் பயிற்சியாளருக்கு சான்றிதழ்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூன் 30

உரும்பிராய் மேம்பாட்டு ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தையல் பயிற்சித் திட்டத்தின் பயிலுநர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் மற்றும் ஆடைகள் கண்காட்சியும் விற்பனை நிகழ்வும் நிறுவனத் தலைவர் மருத்துவர் கணேசவேலின் தலைமையில் நேற்று நடைபெற்றன. நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி கலந்துகொண்டார். இதன்போது பயிலுநர்களால் தைக்கப்பட்ட ஆடைகளும் காட்சிப்படுத்தப்பட்டன. (ச-26)

# விபத்துகளைத் தவிர்ப்போம் மன்னாரில் விழிப்புணர்வு


மன்னார், ஜூன் 30

மன்னார் உயிலங்குளத்தில் இயங்கும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனத்தின் மாணவர்களின் ஏற்பாட்டில், "வீதி விபத்துகளைத் தவிர்ப்போம்" எனும் தலைப்பில் விழிப்புணர்வு நாடகம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மன்னார் பேருந்து நிலையத்தில் நடைபெற்றது. இதன்போது வீதி விபத்துகளுக்கான முக்கியமான காரணங்கள், அதன் தீவிர விளைவுகள் மற்றும் தடுக்கும் வழிமுறைகள் குறித்து பொதுமக்களுக்குத் தெளிவுபடுத்தும்வகையில் நாடகம், பாடல்களை மாணவர்கள் நிகழ்த்தினார்கள்.

மேலும், பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டுநர்களிடையே பொறுப்பான போக்குவரத்துப் பழக்கங்களை வளர்க்கும் நோக்கில் வாகன ஓட்டுநர்கள் பாதுகாப்புச் சாதனங்களைப் பயன்படுத்தும் முக்கியத்துவம், போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிக்கும் அவசியம் மற்றும் அவற்றை மீறுவதால் ஏற்படும் அபாயங்கள் குறித்துத் தெளிவுபடுத்தினர். (ச-41,56,60)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








## சாவகச்சேரி, கல்வயல், பெருங்குளம்

# அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்

## ஸர்வ மங்களங்கள் மிகுந்த "விசுவாவசு" (2025) வருஷ திவ்ய ப்ரம்மோற்சவ சிறப்பு மலர்.

### கணபதித்யானம்



ஓம்
மூஷிகவாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண வி.சாம்பித சூத்ர:
வாமன ரூப மஹேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே:



திங்களங் கொழுந்து வேய்ந்த செஞ்சடைக் கொழுந்தே போற்றி
மங்கை வல்லபைக்கு வாய்த்த மகிண நின் மலர்த்தாள் போற்றி
ஐங்கர நால்வாய் முக்கண் அருட் சிவக்களிறே போற்றி
கங்கையாள் மகிழும் செல்வக் கணேச நின் மலர்ந்தாள் போற்றி



### ப்ரம்மோற்சவ கால பிரதான கிரியா நிகழ்வுகள்

| | | | | |
|---|---|---|---|---|
| ◆ ஆனி 16ம் நாள் | 30.06.2025 | திங்கட்கிழமை | மாலை 06.00 மணி | விநாயகர் வழிபாடு, ஸாந்தி கர்மங்கள் |
| ◆ ஆனி 17ம் நாள் | 01.07.2025 | செவ்வாய்க்கிழமை | பகல் 10.00 மணி | கொடியேற்றம் |
| ◆ ஆனி 24ம் நாள் | 08.07.2025 | செவ்வாய்க்கிழமை | இரவு 08.00 மணி | சப்பரம் |
| ◆ ஆனி 25ம் நாள் | 09.07.2025 | புதன்கிழமை | பகல் 10.00 மணி | இரதோற்சவம் (தேர்) |
| ◆ ஆனி 26ம் நாள் | 10.07.2025 | வியாழக்கிழமை | பகல் 10.00 மணி | தீர்த்தோற்சவம், மாலை கொடி இறக்கம் |
| ◆ ஆனி 27ம் நாள் | 11.07.2025 | வெள்ளிக்கிழமை | மாலை 06.00 மணி | பூங்காவனம் |
| ◆ ஆனி 28ம் நாள் | 12.07.2025 | சனிக்கிழமை | காலை 10.00 மணி | ப்ராயச்சித்தம் |
| ◆ ஆனி 28ம் நாள் | 12.07.2025 | சனிக்கிழமை | மாலை 05.00 மணி | வைரவர் ஆராதனை |

**தேவஸ்தான மஹோற்சவ சிவாச்சாரியார்- சகலாகம பண்டிதர்**
**சிவஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக்குருக்கள் - பொன்னாலை வரதராஜப்பெருமாள் தேவஸ்தானம்**

ஆன்மாக்களின் மனம் ஒருவழிப்பட்டு, கீழ்ப்படிவு, நீதிநிலை நிற்றல், பணிவுடமை, தன்னலம் மறுத்து பிறர் நலம் விரும்பல் ஆகிய சிறந்த பண்புகளை ஆலய வழிபாடு பெற்றுத்தரும். சிவபெருமான் தனது ஐந்து திருமுகங்கள் மூலம் ஆகமங்கள் 28ஐ ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருளிச் செய்தார். ஆலயவழிபாடு ஆகம நெறிகளை மூலாதாரமாகக் கொண்டது. சிவ தர்மம் 10 கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாகும்.

1.அகிம்சை 2.சத்தியம் 3.பிறர்பொருள் விரும்பாமை 4.சிற்றின்பம் நாடாமை 5.ஆசை அறுத்தல் 6.குரோதம் தவிர்த்தல் 7.சுகதுக்கங்களை சமமாக மதித்தல் 8.நேர்மை 9.மனத் தூய்மை 10.பெரியோரை பேணல்.

"மனத்துக்கண் மாசு இலன் ஆதல் அனைத்து அறன் ஆகுல நீர பிற" என்பது திருக்குறள் சிவனை அடையாத வித்தை (கல்வி) பாழ் என்கிறது ஆகமங்கள். "கற்றதனால் ஆய பயன் என் கொல் வாலறிவன் நற்தாள் தொழார் எனில்" என்பதும் திருக்குறள். ஒரு சிறு புல் புளுவைக்கூட தோற்றுவிக்க வல்லமை அற்ற மனிதர்கள் இப்பிரபஞ்சம் சகலவசதிகளையும் படைத்து நிலை நிறுத்தி இரட்சித்து அழிக்கும் வல்லமையினை கொண்ட இறைவனை ஆகமங்களில் கூறப்பட்ட நெறிவழியே ஆலயங்களில் எளுந்தருள வைத்து வணங்குகின்றனர்.

ஊர் மக்களெல்லாம் வருஷமொரு தடவை ஒன்று திரண்டு இந்த இறைவனுக்கு இயன்ற வழியில் 10 தினங்களிளோ, 15 தினங்களோ, 25 தினங்களோ பிரம்மாண்டமாக விழா எடுத்து வழிபடுவதே ப்ரமமோற்சவம் ஆகும். மகோற்சவம் அல்லது பரம்மோற்சவம் பல கிரியைகளை உள்ளடக்கியதாகும். இதனை நிகழ்த்தக் கூடியவர்கள் சிவாச்சாரியார்கள் ஆவார். மஹோற்சவ காலம் தொடங்க முன் நிகழ்த்தப்பெறும் சாந்தி கர்மங்கள் மிகவும் முக்கியமானது இதில் ஆலயசூழல் நாட்டில் உள்ள தீயசக்திகளான "யசஷ", "ராசஷச", "பூத", "பைசாச", 'ப்ரம்மராஷச", "காளி", "சலனி", "பைரவ", ஆகியவர்கள் திருத்திப்படுத்தப்பட்டு துர இடங்களுக்கு அனுப்பி வைத்த பின் அவர்களின் இடங்களில் சிவசக்திகளான அஷ்டவித்தியேஸ்வரர்கள் எனப்படும் "இந்திரன்", "அக்னி", "யமன்", "நிருதி", "வருணன்", "வாயு", "குபேரன்", "ஈசானன்" ஆகியோர் நிலை நிறுத்தப்படுகின்றனர். இதன் மூலம் ஆலய சூழல் கிரா மங்களில் அசம்பாவிதங்கள் இடையூறுகள் நிகழாத வண்ணம் தடுக்கப்படுகின்றது.

சிவாச்சாரியார்கள் கண்ணுக்கோ இந்திரியங்களுக்கோ எட்டாத பரம்பொருளை ஆலய விம்பத்தில், தம்பத்தில்(கொடிமரம்), கும்பத்தில் (யாககும்பம்), உற்சவர் ஆகியவற்றில் ஸ்தாபித்து ஆவாகனம் செய்து (எழுந்தருளவைத்து) மந்திரம் பாவனை கிரியை முத்திரை மூலம் இறைவனை பக்தர்களுக்கு அருள வைக்கின்றனர். "பாவனை என்பது எண்ணுதல்", "கிரியை என்பது முத்திரைகளுடன் செய்யும் செயல் வடிவம்", "மந்திரம் என்பது எண்ணங்களுக்கும் கிரியைகளுக்கும் ஏற்ப பலன் தரவல்ல ஒலி அதிர்வு அலைகளை உடைய சொற்தொடர்கள்" ஆகும். மந்திரம், பாவனை இல்லாத கிரியை எந்த பலனையும் அருளாது என்கின்றது ஆகமங்கள். மேலும் ஆலயத்தில் எவ் எவ் இடங்களில் நின்று யார் யார் என்ன தொண்டுகள் செய்ய வேண்டும், பக்தர்கள் எங்கு நின்று எப்படி வணங்க வேண்டும் என்று ஆகமங்களில் தெளிவாக கூறப்பட்டுள்ளது. (காமிகாகமம் பிரதிஷ்டாதி உற்சவாந்தபடலம்) இது ராஜசபை அல்லது அரச திணைக்களங்களில் ஒவ்வொரு துறையினருக்கு உரிய ஒவ்வொரு இடம் அமைந்து இருப்பதை போல ஆகும். ஒழிய வேறு இல்லை.

**ஆகவே இவ்வாலய சூழலில் வசிப்பவர்கள், வதிவிடமாகக் கொண்டவர்கள் இடம்மாறி, உள்நாட்டிலோ அல்லது வெளிநாட்டிலோ வாழ்கின்ற எல்லோரும் இந்த ப்ரம்மோற்சவத்தில் தரிசனம் செய்து இஷ்ட சித்திகளை பெற்று உய்யும் வண்ணம் எல்லோருக்கும் விண்ணப்பிக்கின்றோம். மேலும் சகல அடியவர்களுக்கும் எமது ஆலய உப சபையான "அமுத சுரபி அன்னதான சபையினர்" திருவமுது ஆராதானம் நிகழ்த்தி பசி ஆற்றுவர் என்பதனையும் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.**

**"லோகே ஸமஸ்த்தா ஸுகினோ பவந்து"**
**எங்கும் மங்களம் என்றும் பெருகட்டும்**

**ஆலய தர்மபரிபாலன சபையினர்**

| | |
|---|---|
| **தலைவர்** | **செயலாளர்** |
| A.V. முருகதாசன் | இ. கிருஷ்ணசாமி |



## ப்ரம்மோற்சவம் சிறப்புற பிரார்த்தனை செய்பவர்கள்

**சாவகச்சேரி பிரபல வர்த்தகர்**

# சண்முகம் அன்ட் சன்ஸ் A9, கண்டி வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மீசாலை வடக்கு அருள்மிகு இராமாவில் கந்தசுவாமி திருக்கோவில் வருடாந்த மஹோற்சவத்தின் வேட்டைத்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. (ச-41-159)



பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தைச் சேர்ந்த பொருண்மியம் நலிவுற்ற குடும்பங்களைச் சேர்ந்த ஐந்து மாணவர்களுக்கு அண்மையில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. நன்னடத்தை பராமரிப்பு மற்றும் சிறுவர் கவனிப்புச்சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலர் இ. த. ஜெயசீலன் தலைமையில் இவை வழங்கப்பட்டன. (ச-25, 9)

மாந்தை மேற்குப் பிரதேச செயலாளராகவும் அம்பாரவேல் பிள்ளையார் ஆலயத்தின் போசகராகவும் இருந்து இறை பதம் அடைந்த அமரர் செல்லத்துரை கேதீஸ்வரனின் நினைவாக அம்பாரவேல் பிள்ளையார் ஆலயத்துக்கு கலாசார மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. குறித்த மண்டபம் 50 இலட்சம் ரூபா நிதிச்செலவில் அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-25.213)




## கண்புரை சத்திரசிகிச்சை

யாழ். ஊரெழுவைச் சேர்ந்த லண்டன் புலம்பெயர் தமிழன் பொ.ரஞ்சனின் 70ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது நிதி அனுசரனையில் அபயம் நிறுவனத்தின் ஊடாகக் கிளிநொச்சி யைச் சேர்ந்த 70 வயோதிபர்களுக்கான இலவச விசேட கண்புரை சத்திர சிகிச்சை முகாம் கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இடம்பெற்றது. இதன்போது கண் மருத்துவநிபுணர் மலரவன் தலைமையிலான மருத்துவர் குழுவினரால் குறித்த சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. (ச-66)







நாடளாவிய ரீதியில் இம்மாதம் போசணை மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளநிலையில் மன்னார் முசலி பொதுச்சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனையின் ஏற்பாட்டில், போசணைக் கண்காட்சி முசலி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் அண்மையில் இடம்பெற்றது.

கண்காட்சியில் உடலுக்குத்தீங்கிழைக்காத உணவுகள் மற்றும் இயற்கையான மரக்கறிகள் பழங்களினால் தயாரிக்கப்பட்ட உணவுகள் காட்சிப்படுத்தப்பட்டதுடன் இலகுவான முறையில் அதிக செலவினம் இன்றி ஆரோக்கியமான உணவுகள் தயாரிப்பது தொடர்பான தெளிவூட்டல்களும் வழங்கப்பட்டன. (ச-25,56)



வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு கலாநிதி அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகையைச் சந்தித்து ஆசி பெற்றனர். (ச-41-56)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




வலி தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளராக கடமையாற்றி இலங்கை நிர்வாக சேவையின் விசேட தரத்திற்கு பதவி உயர்வு பெற்று வடமத்திய மாகாண சபைக்கு செல்லவுள்ள

**திருமதி. சுபாஜினி மதியழகன்**

அவர்களை மேலும் பல உயர்வுகளை பெற்றிட மனதார பாராட்டி வாழ்த்துகின்றோம்.


வாழ்த்துவோர்: ஊழியர் நலன்புரிச்சங்கம் பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 07 . 04 . 1950

மறைவு 29 . 06 . 2025



## தாமோதரம்பிள்ளை கனகசபை

நரியிட்டான், மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் நீதிமன்ற வீதி, மல்லாகத்தை வதிவிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை கனகசபை அவர்கள் நேற்று (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-பூரணம் தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-நாகேஸ்வரி தம்பதியின் அன்பு மருமகனும், சுசீலாதேவி (ஓய்வு நிலை முகாமைத்துவ உதவியாளர்,பிரதேச செயலகம்-உடுவில், தெல்லிப்பளை) அவர்களின் அன்புக் கணவரும், மனோன்மணி, காலஞ்சென்ற நடராஜா மற்றும் கனகரத்தினம், கண்ணுத்துரை, துரைசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், குமாரகுலசிங்கம், யோகநாயகி, சுவேந்திரமலர், லக்சுமிகாந்தி (ஓய்வு நிலை ஆசிரியர்), சுபத்திரா, சத்தியதேவி (ஓய்வு நிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவஞானம் (ஓய்வு நிலை களஞ்சியப் பொறுப்பாளர், வலி கிழக்கு ப.நோ.கூ.சங்கம்- அச்சுவேலி) அவர்களின் சகலனும், சேதுப்பிரியா (கிளை முகாமையார்,கூட்டுறவு ஆயுள் காப்புறுதி நிறுவனம்), குகன் (சாரதி, இலங்கை வங்கி-யாழ்ப்பாணம்), ரோகினி (எழுதுவினைஞர்-பாரவூர்திகள் சங்கம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வசந்தகுமார் (அருள்), நாகேஸ்வரன் (அஞ்சல் உதவியாளர்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவிநாத், திஷானா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2025) திங்கட்கிழமை பிற்பகல் 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
077 967 2095 (மனைவி)
077 975 0037 (மகன்)
077 939 6652 (மகள்)
076 246 5410 (மகள்)

நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## நன்னித்தம்பி சிவசம்பு

கேசரி வீதி, தையிட்டி தெற்கு காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும், பிறப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி சிவசம்பு இன்று (29.06.2025) காலமானர்

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு சரஸ்வதியின் அன்புக்கணவரும், பொன்னம்பலம், காசிப்பிள்ளை, சின்னத்தங்கம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச்சகோதரரும், நவமணிதேவி, கிருஷ்ணராஜா, காலஞ்சென்ற தவமணிதேவி, லக்ஷமிதேவி, சீதாதேவி, லங்காதேவி, வனிதாதேவி, வசந்ததேவி, ஸ்ரீதேவி ஆகியோரின் அன்புத்தந்தையும், ஆனந்தசோதி, சிறிகரன், யெயசீலன், சற்குணசீலன், விஜயகுமாரன், சரவானந்தன், லம்போதரன், சோமரஞ்சிதன், தயானி ஆகியோரின் அன்புமாமனாரும், கோபிதாஸ், கோகிலன், பவித்திரா, றஜீப், சுகன்யா, கீர்த்தனா, நிகன்யா, டிசாந், யதுசன், லக்சன், அபிசா, விதுசன், சர்மிலன், தினேசன், கர்சிகன், றொகான், றஷ்மி, அனுஜன், அபிசன், அனோயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (30.06.2025) திங்கட்கிழமை கேசரி வீதி (முனியப்பர் கோவிலடி) அன்னாரின் இல்லத்தில் 10.00 மணியளவில் இடம்பெற்று தையிட்டி ஆவளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும் இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

கேசரி வீதி,
(முனியப்பர் கோயில் அருகாமையில்)
தையிட்டி தெற்கு,
காங்கேசண் துறை.

077 745 4834
077 273 5276
077 844 8102

## காணி விற்பனைக்கு

கட்டுடை மாணிப்பாய் கோவிட்பற்று எழுமுள்ளி ஒழுங்கையில் 6 பரப்பு வீடு கட்டுவதற்கு உகந்த காணி விற்பனைக்குண்டு.

077 787 7843

## காணி விற்பனைக்கு

தெல்லிப்பளை வைத்தியசாலையில் இருந்து 3/4 Km தூரத்தில் பரப்பு 18 இலட்சம். 5+3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

077 446 0241

## இப்போதும் இணக்கமே

ஒபாமா தம்பதிகளுக்கு இடையில் விவாகரத்து ஏற்பட்டுள்ளது என்று வெளியான தகவல்களை, மிச்செல்ஒபாமாதிட்டவட்டமாக மறுத்துள்ளார். (ம)

## மணமகள் தேவை

கொழும்பில் பிரபல பத்திரிகை நிறுவனத்தில் உதவி முகாமையாளராக பணிபுரியும் 1996.09.13ல் பிறந்த உத்தரம் 1ம் பாதம் செவ்வாய் குற்றம் இல்லாத மணமகனுக்கு பெற்றோர் நல்ல மணப் பெண்னை தேடுகின்றனர்.

077 716 2685

# மரண அறிவித்தல்

## வீரகத்திப்பிள்ளை முத்துலிங்கம்

(ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர் இ.போ.சபை- கோண்டாவில்)



தோற்றம் 18.11.1936

மறைவு 29.06.2025

கலாசாலை வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரகத்திப்பிள்ளை முத்துலிங்கம் அவர்கள் நேற்று (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்திப்பிள்ளை- கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவகுரு-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சற்குணதேவி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவபாக்கியம், தவமலர் மற்றும் பரமயோகன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் நவகாந்த் (ஆசிரியர்,கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்), சாமிலா (ஆசிரியர்-முத்துத்தம்பி மகாவித்தியாலயம்), மைதிலி (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தந்தையும், முருகதர்ஷினி (ஆசிரியர்-ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியாலயம்), குகநாதன் (ஆசிரியர்-கொக்குவில் இந்துக்கல்லூரி), மயூரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கோமுகி, பிரவீனா, டிரோசன், சதுர்சன், ஹவிசன், யஸ்விகா, யுகாசினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.


தகவல்:
குடும்பத்தினர்.
077 596 3550

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 . 04 . 1943

மறைவு 30 . 06 . 2022




## கந்தையா இராஜதுரை (இராசா இரும்பகம்-உரிமையாளர்)

அப்பா நீங்கள் கண் முன்னே நிலவாக வாழ்ந்தீர்கள்
ஆனால் எம்மை தவிக்க விட்டுச்
செல்ல மனமிலாலாமல் சென்றீர்கள் அப்பா
அவை இன்றும் எம் மனக்கண்களில்
அழியாத கோலங்களாய் நிற்கின்றன
சம்பூரானின் சதியால் இழந்தோம் அப்பா
உங்களின் ஆத்மா நல்ல ஆன்மா
என்று யாவருக்கும் உணர்த்தினீர்கள் அப்பா
உங்களின் ஆன்மா சாந்தியடையட்டும்

நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பலாலி நாகதம்பிரான் ஆலயம் மக்கள் பாவனைக்கு விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
பலாலி நாகதம்பிரான் ஆலயம் 35 ஆண்டுகளுக்குப் பின்னர் மக்கள் பாவனைக்காகநேற்றுவிடுவிக்கப்பட்டுள்ளது.

உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பலாலி நாகதம்பிரான் ஆலயத்துக்கு ஆலய நிர்வாகத்தினர் மட்டும் சென்று வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. கடந்த 23ஆம் திகதி ஆலயத்தின் விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தன.

நேற்று ஆலயத்துக்கு எந்த நேரமும் எவரும் சென்றுவரக் கூடியவகையில் அங்கிருந்த முட்கம்பிகள் அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. ஊர் மக்கள் நேற்று அங்கு பொங்கல் பொங்கி வழிபட்டனர். (எ-26)

# பயங்கரவாதத் தடைச் சட்டம் செப்ரெம்பருக்கு முன் நீக்கம்

## ஐ.நாவை சமாளிக்க அரசின் திட்டம்

கொழும்பு, ஜூன் 30
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடருக்கு முன்னதாக பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படும் என்றும், நிகழ்நிலை காப்புச் சட்டம் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என்றும் அறியமுடிகின்றது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும்செப்ரெம்பர்மாதம்30ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக புதிய தீர்மானம் ஒன்று கொண்டுவரப்படவுள்ளது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் மீளாய்வு அறிக்கையும் முன்வைக்கப்படவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடரில் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் வெளிவிவகார அமைச்சர்தலைமையிலான உயர்மட்டக் குழு பங்கேற்கவுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-44)

# செம்மணிப்புதைகுழி பேரவலத்தின் உச்சம்

## சீமான் கண்டனம்

சென்னை, ஜூன் 30

**செம்மணி தமிழர் புதைகுழிகள் மனிதப்பேரவலத்தின் உச்சம்; சிங்கள இனவெறியர்களின் தமிழின அழிப்புக்கான மற்றுமொரு வரலாற்றுச் சான்று. உலக நாடுகள் இப்போதாவது மௌனம் கலைக்குமா? உரிய நீதியைப் பெற்றுத் தருமா? என்று நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், ஈழத்தாயகத்தின் வடக்குப் பகுதியில் யாழ்ப்பாணம் செம்மணி - சித்துப் பாத்தி இடுகாடு அருகே அண்மையில் குழந்தை உட்பட 5 தமிழர்களின் எலும்புக் குவியல்கள் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழி பெரும் அதிர்ச்சியையும், மிகுந்த மனவலியையும் தருகிறது.

1996 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 7 அன்று சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி தேர் வெழுதிவிட்டு வீடு திரும்பும்வழியில் யாழ்ப்பாணம் காவலரணில் இருந்த 11 சிங்கள இனவெறி இராணுவத்தினரால் கூட்டுப்பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டுக் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டார். அவரைத் தேடிச் சென்ற தாய் ராசம்மா, தம்பி பிரணவன், குடும்ப நண்பர் சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோரும் கொல்லப்பட்டு நால்வரின் உடலும் அடுத்தநாள் வயல்வெளியில் புதையுண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

ஈழத்தமிழ் மக்களின் இதயத்தை நொறுக்கிய இக்கொடூர நிகழ்வால், பெரும் மனக்கொந்தளிப்புடன் வீதிகளில் இறங்கித் தமிழ் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிருஷாந்தி கொலைவழக்கில் கைது செய்யப்பட்டு, மரண தண்டனையை எதிர்கொண்ட இராணுவ வீரர்களில் ஒருவரான சோமரத்ன ராஜபக்ச இலங்கை நீதிமன்றத்தில் துணிச்சலுடன் அளித்த வாக்குமூலத்தின் மூலமாகவே முதன் முதலாக செம்மணி மனிதப் புதைகுழிகள் வெளிச்சத்துக்கு வந்தன. அவரது வாக்குமூலத்தின்படி 1995 - 1996 வரையான ஆண்டுகளில் இலங்கை, இராணுவத்தினரால் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்ட நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் தம்முடைய உயர் அதிகாரிகளால் படுகொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டனர் என்றும் பத்துக்கும் மேற்பட்ட புதைகுழிகளைத் தம்மால் அடையாளம் காட்டமுடியும் என்றும் தெரிவித்திருந்தார்.

இன்றைக்கும் ஈழத்தமிழ்ச் சொந்தங்களைத்தேடி அலைகின்ற காணாமல் ஆக்கப்பட்ட தங்கள் உறவினர்களான, பல்லாயிரம் தமிழர்களில் பெரும்பான்மையோர் இப்படிச் சிங்கள இனவெறி இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்டவர்கள்தான் என்பது ஏற்றுக்கொள்ளமுடியாத துயரம் தோய்ந்த உண்மையாகும்.

மனிதப் புதைகுழிகள் குறித்து சுதந்திரமான சர்வதேச விசாரணை நடத்தக்கோரி ஈழத்தமிழ்ச் சொந்தங்கள் முன்னெடுக்கும் அறப்போராட்டம் வெல்லட்டும் - என்றார். (ச-இ)



# ஆர்.பி.ஜி. மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 30
செம்மணியில் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், அங்கு ஆர்.பி.ஜி. ஏவுகணை ஒன்று நேற்று இனங்காணப்பட்டது.

நீதிமன்ற அனுமதி பெற்று இன்று விசேட அதிரடிப் படையினரைக் கொண்டு அந்த எறிகணை அகற்றப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-125)

## வடக்கின்...

மேற்கொள்கின்றார் என்று பாய்ந்துள்ளார் நெடுச்சாலைகள் போக்குவரத்து விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க.

நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த அமைச்சர் , வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எம்.ஏ.சுமந்திரன் கடந்தகால அரசாங்கத்தில் எதையும் செய்யவில்லை. கடந்தகால அரசாங்கத்துடன் எவ்வாறு இருந்தார் என்பது எமக்குத் தெரியும். எமது அரசாங்கம் இனவாதம், மதவாதம், பிரதேசவாதம் எவற்றையும் பாவிக்கவில்லை. அந்த யுகம் போய்விட்டது. நாட்டில் அனைத்து இனத்தவர்களுக்கும் சம உரிமை உள்ளது.

வடக்கு மக்களின் காணிகளைப் பிடிக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. வடக்கு மக்களின் காணிகளைப் படிப்படியாக விடுவித்து வருகின்றோம். மக்களால் நிராகரிக்கப்பட்ட அரசியல்வாதிகள் வெளியே இருந்து பிரதேசவாதம், மதவாதம் பேசவேண்டாம். உங்கள் அரசியல் இலாபங்களுக்காக இனங்களிடையே முரண்பாடுகளை ஏற்படுத்த வேண்டாம். தெற்கில் ராஜபக்சக்கள் இருக்கின்றனர், வடக்கில் எம்.ஏ.சுமந்திரன் போன்ற ராஜபக்சக்கள் இருக்கின்றனர்.

வர்த்தமானி தொடர்பாக அரசாங்கம் தற்போது பரிசீலித்து வருகின்றது. தற்போது "கூகிள் மப்" மூலம் வன ஜீவராசிகள் திணைக்களத்துக்குரிய இடங்களை அடையாளப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. நீதிக்கு விரோதமாகக் கைப்பற்றப்பட்ட இடங்களை மீளவும் மக்களிடம் வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும். விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் முல்லைத்தீவுக்குச் சென்று காணிப் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்து வருகின்றார். மக்களின் காணிகளைப் பிடித்து வைத்து மக்களின் எதிர்ப்பைச் சம்பாதிக்க நாம் விரும்பவில்லை. காணிகளை மீள வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்றார்.

வடக்கில் காணிகளைக் சுவீகரிக்கும் வகையில் அரசாங்கத்தால் வெளியிடப்பட்ட வர்த்தமானியை இடைநிறுத்தி உயர் நீதிமன்று இடைக்கால உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த வர்த்தமானிக்கு எதிராக உயர்நீதிமன்றில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் மனுத்தாக்கல் செய்திருந்தார். அந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே வர்த்தமானியை இடைநிறுத்தி உயர்நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தது. (அ-எ-26)

## செம்மணியில்...

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இனங்காணபட்ட மனிதப் புதைகுழியில் நேற்று இரண்டாம் கட்ட அகழ்வு நடவடிக்கைகளின் நான்காம் நாள் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

**ஆடை, புத்தகப்பை மீட்பு**

நேற்றுமுன்தினம்வரை நடத்தப்பட்ட அகழ்வுப் பணிகளில் மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்துபோதும், ஆடைகளோ, வேறு பொருள்களோ இனங்காணப்படவில்லை. நேற்று நடத்தப்பட்ட அகழ்வு நடவடிக்கைகளில் என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்த அதே வேளை, என்புத் தொகுதி ஒன்றுக்கு அருகில் ஆடை, சிறிய வளையல்கள் நீலநிற துணி புத்தகப்பை என்பன அடையாளம் காணப்பட்டுள்ளன. கடந்தகாலங்களில் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் அரச சார்பற்ற தொண்டு நிறுவனங்களால் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்பட்ட புத்தகப் பையை ஒத்ததாக காணப்பட்டாலும், அது இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை.

**மண் மாதிரி சேகரிப்பு**

புதைகுழி அடையாளம் காணப்பட்டுள்ள இடத்தின் மண் மாதிரியைப் பரிசோதிப்பதற்கு சட்ட மருத்துவ அதிகாரிகள் நீதிமன்றில் விண்ணப்பம் செய்திருந்த நிலையில், நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தது. கொழும்பில் இருந்து நேற்று வந்த குழு ஆய்வுக்கான மண் மாதிரிகளைச் சேகரித்தது.

இந்த அகழ்வு நடவடிக்கைகள் நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜாவின் கண்காணிப்பில் துறைசார் நிபுணரும், பேராசிரியருமான சோமதேவவின் தலைமையில் நடைபெற்று வருகின்றன. அகழ்வு நடவடிக்கைகளின்போது சட்ட மருத்துவ அதிகாரி பிரணவன் செல்லையா தலைமையிலான குழுவினரும், காணாமல் ஆக்கப்பட்டோர் ஆணைக்குழுவின் சட்டத்தரணி பூரணி மரியநாயகம், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சார்பில் சட்டத்தரணி வி.கே.நிரஞ்சன் ஆகியோரும் பிரசன்னமாகி வருகின்றனர். (அ-எ-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தமிழக...

குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 8 பேர் இலங்கைக் கடற்படையினரால் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். மீன்பிடிப் படகொன்றும் இலங்கைக் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைதுசெய்யப்பட்டவர்களை தலைமன்னாருக்குக் கொண்டு சென்று கடற்றொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கடற்படைப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய கடற்றொழிலாளர்களுக்கு விதிக்கப்பட்டிருந்த மீன்பிடித் தடைக்காலம் அண்மையில் முடிவடைந்திருந்த நிலையில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களே கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-எ-இ)

## முதியவர்...

பட்டுள்ளார். இந்தச் சம்பவம் வல்வெட்டித்துறையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்துள்ளது.

வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசுகின்றது என்று வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்றபோது, வீட்டுக்குள் தூக்கில் தொங்கிய நிலையில் அவரது சடலம் காணப்பட்டுள்ளது. சடலமாக மீட்கப்பட்டவர் 60 வயதுடையவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கரவெட்டி திடீர் இறப்பு விசாரணை அதிகாரி வே.பாஸ்கரன் சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை முன்னெடுத்தார். சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக பருத்தித்துறை ஆதார மருத்துவ மனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (அ-எ-100)

## புதைகுழி...

டம் கோரியுள்ளோம். இவ்வாறு சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க நேற்றுத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- வடக்கில் செம்மணி, மண்டைத்தீவு, கொக்குதொடுவாய், திருக்கேதீஸ்வரம் உள்ளிட்ட பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. வடக்கிலும், தெற்கிலும் இவ்வாறு நூற்றுக்கணக்கான புதைகுழிகள் இருக்கக் கூடும். இவை தொடர்பில் நீதியை பெற்றுக்கொடுப்பதற்கே எமது அரசாங்கம் ஆட்சிக்கு வந்துள்ளது. மனிதப்புதைகுழிகள் தொடர்பில் விசாரணை நடத்தப்படும்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரை நாம் சந்தித்தோம். மனித எலும்புக்கூடுகளை அடையாளம் கண்டு, ஆய்வுக்காக உரிய வசதிகளுள்ள வெளிநாடொன்றுக்கு அவற்றை அனுப்ப வேண்டும். இதற்கு காலமெடுக்கும். மாத்தளை மனிதப் புதைகுழியில் எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளை அனுப்பும் போது, எலும்புக்கூடுகள் மாற்றப்பட்டுள்ளன என்ற பலத்த சந்தேகம் எமக்குள்ளது.

எமக்கு ஆய்வு செய்யக்கூடிய ஆய்வகமொன்றை இலங்கையில் நிறுவுவதற்கு உதவவேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். மனிதப் புதைகுழிகள் தொடர்பில் நிச்சயம் நீதியான விசாரணை முன்னெடுக்கப்படும். எமது தோழர்களும் காணாமல்ஆக்கப்பட்டுள்ளனர். எனவே புதைகுழிகளுடன் நாம் விளையாடமாட்டோம். அந்த வலி, வேதனை எமக்கு நன்கு புரியும். நீதிமன்ற நடவடிக்கை ஊடாக நீதி நிச்சயம் பெற்றுக்கொடுக்கப்படும். செம்மணி அகழ்வுப் பணிகளுக்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ-எ-44)

## அடாத்தாக...

தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- அந்த இடத்துக்கு 8 பேர் உரிமை கோரியுள்ளனர். அதனால் அந்த மாளிகையை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இந்தப் பிரச்சினையை முழுமையாகத் தீர்த்த பின்னரேமாளிகையைமுதலீட்டாளர்களுக்கு வழங்கமுடியும்.

காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு வழங்கிப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவருவதா? அல்லது வேறு வழிகளில் தீர்ப்பதா? என்பது தொடர்பாக ஆலோசித்து வருகின்றோம்.

பிரச்சினையை விரைவாகத் தீர்த்து மாளிகையை முதலீட்டாளர்களுக்கு வழங்குவதில் அரசாங்கம் உறுதியாக உள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த மாளிகையை ஒருபோதும் உபயோகிக்கமாட்டார். இந்த மாளிகை மட்டுமல்ல நாட்டின் ஏனைய பாகங்களில் உள்ள ஜனாதிபதி மாளிகைகளையும் அவர் உபயோகிக்க மாட்டார் - என்றார். (அ-எ-75)

## காரில்...

டுள்ளனர். சந்தேகநபர்களிடம் இருந்து 550 கிராம் கஞ்சா, 160 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், இளவாலையைச் சேர்ந்த 23 வயதுடைய யுவதி மற்றும் இளைஞன் ஆகியோரே கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் இருவரும் காதலர்கள் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. யாழ்ப்பாணத்தில் இருந்து சொகுசுக்காரில் போதைப்பொருள்களைக் கொண்டு சென்று விற்பனையில் ஈடுபட்ட போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேகநபரான இளைஞனுக்கு எதிராக 550 கிராம் கஞ்சா உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும், மற்றைய சந்தேகநபரான யுவதிக்கு எதிராக 160 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டிலும் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. சந்தேகநபர்கள் இருவரும் நேற்று முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். சந்தேகநபர் இருவரையும் தடுத்து வைத்து விசாரணை மேற்கொள்ளப் புதுக்குடியிருப்புப் பொலிஸார் நீதிமன்றில் அனுமதி கோரினர்.

பிரதான சந்தேகநபரான இளைஞனை மூன்று நாள்கள் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்ய நீதிமன்று அனுமதித்தது. மற்றைய சந்தேகநபரான யுவதியை யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-எ-19)

## நெடுந்தீவுப்...

றும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. 13 உறுப்பினர்களைக் கொண்ட நெடுந் தீவுப் பிரதேசசபைக்கான தவிசாளர், பிரதித் தவிசாளர் தெரிவு உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் இன்று நடைபெறவுள்ளது.

இலங்கை தமிழரசுக் கட்சி 6 உறுப்பினர்களையும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி 4 உறுப்பினர்களையும், தேசிய மக்கள் சக்தி 2 உறுப்பினர்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஒரு உறுப்பினர்களையும் கொண்டுள்ளன. (அ-எ-26)

## போதைப்...

டார். மறுநாள் அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டார்.

அவருக்குச் சிகிச்சைகள் வழங்கப்பட்டு வந்த நிலையில் நேற்றுமுன்தினம் மாலை அவர் உயிரிழந்தார். இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் முன்னெடுத்தார்.

உயிரிழந்தவர் கடந்த ஐந்து மாதங்களாக ஊசிமூலம் போதைப் பொருள் பாவனையில் ஈடுபட்டு வந்துள்ளார் என்பது கண்டறியப்பட்டுள்ளது. (அ-எ-26)

## பெண்ணின்...

பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தனித்து வாழ்ந்துவந்த அந்தோனிப்பிள்ளை றீற்றா (வயது-71) என்பவர் கடந்த 22ஆம் திகதி கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் அவரது உடல் புதைக்கப்பட்டது. இந்தநிலையில் அவரது மரணத்தில் சந்தேகம் உள்ளது என்று உறவினர்கள் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்துவந்த தருமபுரம் பொலிஸார், உயிரிழந்த பெண்ணின் கைபேசியை அவரது பேர்த்தியின் கணவரின் வீட்டில் இருந்து மீட்டுள்ளனர். அதையடுத்து பேர்த்தியின் கணவர் விசாரணைக்குட்படுத்தப்பட்டார். உயிரிழந்த பெண்ணின் தங்கச் சங்கிலி பிரதான சந்தேகநபரால் கடந்த 22ஆம் திகதி விசுவமடுவில் உள்ள தனியார் வர்த்தக நிலையம் ஒன்றில் ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபாவுக்கு அடகு வைக்கப்பட்டமைக்கான ரசீதும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

விசாரணைகளின் அடிப்படையில் பிரதான சந்தேகநபர் உட்பட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேகநபர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சிநீதிமன்றில்முற்படுத்தப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-113)

## வடக்கில்...

வலயத்திலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் விவசாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை, தொழில்நுட்பம் ஆகிய நான்கு விடயப் பரப்புகளில் செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இணைக்கும் கொக்கிளாய் பால அபிவிருத்தியும் இந்தத் திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்டுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் செயற்றிட்டங்களின் முதற்கட்ட செயற்படுத்தலுக்காக 10 மில்லியன் டொலர் ஒதுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கியின் இந்த அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான கலந்துரையாடல் நேற்று வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. அபிவிருத்திப் பணிகளின் தொடர் நடவடிக்கைகளுக்காக இணைப்புக்குழுவொன்றும் முன்மொழியப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஒவ்வொரு மாவட்டங்களினதும் மாவட்டச் செயலர்கள் தங்களது தேவைகளை முன்வைத்தனர். உலகவங்கியின் எதிர்காலத் திட்டங்களில் அவற்றை உள்வாங்கவேண்டும்என்றும்கோரிக்கைமுன்வைத்தனர்.

உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி தலைமையிலான குழுவினரும், வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் மற்றும் அமைச்சர்களான பிமல் ரத்நாயக்க, சுனில் ஹந்துன்நெத்தி, இ.சந்திரசேகரன், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.சிறீபவானந்தராஜா, ஜெ.ரஜீவன், க.திலகநாதன், ம.ஜெகதீஸ்வரன், வடக்கு மாகாண பிரதம செயலாளர், வடக்கின் 5 மாவட்டங்களினதும் செயலாளர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினரும் இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர். (அ-எ-26)

## புலம்பெயர்...

செம்மணிப் புதைகுழிக்கு நீதிகோரியும், சர்வதேச கண்காணிப்புடன் புதைகுழி அகழ்வை மேற்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தியும் புலம்பெயர் நாடுகளில் போராட்டங்கள் எழுச்சிபெறத் தொடங்கியுள்ளன.

செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழியில் தொடர்ச்சியாக என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டுவரும் நிலையில், புதைகுழிக்கு நீதி கோரியும், சர்வதேச கண்காணிப்புடன் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியும் அண்மையில் மூன்று தினங்கள் "அணையா விளக்கு" மக்கள் தன்னெழுச்சிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாகவும், அந்தப் போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையிலும் புலம்பெயர் நாடுகளில் தற்போது போராட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை பிரிட்டனில் தமிழீழ சுயநிர்ணய அமைப்பால் வெகுசனப் போராட்டம் நடத்தப்பட்டுள்ளது. செம்மணி மட்டுமல்லாது வடக்கு, கிழக்கில் உள்ள 100க்கும் மேற்பட்ட பல்வேறு இடங்களிலும் உள்ள மனிதப் புதைகுழிகள் தொடர்பிலும் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் வகையில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (அ-எ-23-27)

## விபத்தில்...

உயிரிழந்துள்ளார். படகுகளைக் கழுவிக்கொண்டிருந்தபோது அலையில் அள்ளுண்ட படகு, மீனவர் மீது கவிழ்ந்ததில் அவர் படுகாயமடைந்தார். உடனடியாக அவர் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோதும் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகள் மருதங்கேணிப் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளது. (அ-எ-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தாக்குதலின் சூத்திரதாரி சஹ்ரான் அல்ல

*அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவிப்பு*

கொழும்பு, ஜூன் 30

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பல தகவல்கள் விசாரணைகள் மூலம் வெளிவந்துகொண்டிருக்கின்றன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்வின் போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்றுவருகின்றன. எமக்கு சில சந்தேகங்கள் இருந்தன. அவை உண்மைதான் என்பது விசாரணைமூலம் தெரியவந்துகொண்டிருக்கின்றது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் சஹ்ரானுக்கு மேல் ஒருவர் (பிரதான சூத்திரதாரி) இருந்திருக்கக்கூடும் என நாம் சந்தேகிக்கின்றோம். இது தொடர்பிலும் தகவல்கள் கிடைத்துள்ளன. விசாரணைகள் இடம்பெறுவதால் அவற்றை வெளியிட முடியாது - என்றார். (எ-44)

**தென்னந் தோட்டக்காணி விற்பனைக்கு**

பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் 20 ஏக்கர் வளமான தென்னைக்கு உகந்த காணி விற்பனைக்கு உண்டு. பகுதியாகவும் பெற்றுக் கொள்ளலாம். 1 ஏக்கர் 15 இலட்சம்.

தொடர்பு:- Whatsapp:- 0044 740 537 3526

(CS/58593) J-1

**கடை வாடகைக்குத் தேவை**

கணனி விற்பனை நிலையமொன்றுக்கு புதிதாக காட்சியறை ஆரம்பிக்க 600 - 800 சதுர அடி கொண்ட இடம் தேவைப்படுகின்றது.

நிலையம் : யாழ்ப்பாண நகர்ப்பகுதி மற்றும் நகரை அண்மித்த பகுதி

தொடர்புகளுக்கு: Phone No : 0763556487
Mail id : career@nit.lk

**22 காணி விற்பனைக்கு 22**

- யாழ் ஆஸ்பத்திரி வீதியில் பூபாலசிங்கம் புத்தக சாலைக்கு முன்பாக 3 கடைகள் 30 பேர்ச்ஸ்
- யாழ் ஆஸ்பத்திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 3 கடைகள் 31 பேர்ச்ஸ்
- யாழ் ஆஸ்பத்திரி வீதியில் மரக்கறி சந்தைக்கு முன்பாக 3 கடைகள் 32 பேர்ச்ஸ்
- யாழ் மின்சார நிலைய வீதியில் CTB தரிப்பிடத்திற்கு பின்பாக 16 அடி அகலமும் 60 அடி நீளமும் கொண்ட மாடிக்கடையும் உடன் விற்பனைக்குண்டு

தொடர்புகளுக்கு: 077 723 2535

# மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நாளை செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை இரவு 7மணிக்கு மஞ்சத்திருவிழாவும், 7ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 6மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7மணிக்கு சப்பறத்திருவிழாவும் இடம்பெறும். 9ஆம் திகதி புதன்கிழமை காலை 9மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும், 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். 12ஆம் திகதி மாலை 6 மணிக்கு சண்டேஸ்வரர் உற்சவம் நடைபெற்று 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை வைரவர் உற்சவத்துடன் திருவிழா நிறைவுபெறும். (ச-41-17)

# பிணி தீர்க்கச் சென்ற குடும்பஸ்தர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 30

குறி சொல்லும் ஆலயம் ஒன்றுக்குச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். வட்டுக்கோட்டையைச் சேர்ந்த 31 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார்.

குடும்பஸ்தர் உடல்சுகயீனமுற்று காணப்பட்ட நிலையில் அராலி மத்தியில் உள்ள குறி சொல்லும் கோவிலுக்கு சென்றுள்ளார். அங்கிருந்தவர் அவரது பிணியை போக்குவதாக கூறி இளநீர் ஒன்றை வழங்கியுள்ளார். அதை அருந்தியவர் சிறிது நேரத்தில் மயங்கி வீழ்ந்துள்ளார். நோயாளர் காவு வண்டி அழைக்கப்பட்டிருந்த நிலையில், அதில் வந்த மருத்துவ உதவியாளர்கள் குடும்பஸ்தர் உயிரிழந்துவிட்டார் என்று உறுதிப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸாருக்கும் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்த்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-27)

## மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 04 . 1945



மறைவு 24 . 06 . 2025

### மகாலட்சுமி வடிவேலுப்பிள்ளை

யாழ் புங்குடுதீவை பிறப்பிடமாகவும் கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை umbichy place, யாழ் நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலட்சுமி வடிவேலுப்பிள்ளை அவர்கள் கடந்த 24.06.2025 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைபதம் எய்தினார். அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தவேலு - கனகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வியும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், பெரியதம்பி வடிவேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், வசந்தமலர், யோகமலர், செல்வமலர், முருகானந்தன், கமலவேணி ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற மகாலிங்கம், இராமச்சந்திரன், மகேந்திரன், காலஞ்சென்ற பராசக்தி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நவநீதன், சச்சிதானந்தன், கருணாகரன், ஜனனி, ரவி ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜனார்தனி, பிரணவன், ஹரிஸ், ரமணா, காருண்யா, ரிஷிகேசன், அனித்தியா, கஜோரி ஆகியோரின் ஆசைமிகு பேர்த்தியும், லாவினின் பூட்டியும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2025) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்கிறோம்.

**நந்தினி (மகள்) : 070 376 2404, +4475 8492 8626**
**முருகானந்தன் (மகன்) : 077 501 7298**
**நவநீதன் (மருமகன்) : 078 2350 9853**
**கருணா (மருமகன்) : 077 039 9192, +1(705) 828 5266**
**ரவி (மருமகன்) : 076 217 9285, +4447 9041 26122**
**தயா (மருமகள்) : 074 044 1375**

**தகவல் :**
**குடும்பத்தினர்**
**243 நாவலர் வீதி**
**யாழ்ப்பாணம்**

## மரண அறிவித்தல்

தோற்றம் 28 . 08 . 1942



மறைவு 29 . 06 . 2025

### இராமலிங்கம் கந்தசாமி

**(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர், ப.நோ.கூ சங்கம் சுன்னாகம்)**

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கந்தசாமி நேற்று (29.06.2025) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், பூதப்பிள்ளை - தங்கநாகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், திருமலர்ச்செல்வியின் அன்பு கணவரும், காலஞ்சென்ற பொன்மணி மற்றும் தவமணி, சிவஞானசுந்தரம் காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், தமிழ்ச்செல்வி (அதிபர்-யா/ஏழாலை ம.வி), அருள்மொழிவர்மன் ( மின் இணைப்பாளர்), காலஞ்சென்ற சிவதீபன் மற்றும் பிருந்தாபன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் யாழ்ப்பாணம்), கௌரீஸ்வரன் (அவுஸ்த்ரேலியா) ஆகியோரின் அன்புத்தந்தையும், சண்முகாணந்தம் (கருமாரி மோட்டேர்ஸ் - கொழும்பு), காந்தமலர் ( தாதியர்-போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்), கோபிகா (பிரதேச வைத்தியசாலை - அனலைதீவு), லக்சியா (அவுஸ்த்ரேலியா), ஆகியோரின் அன்பு மாமனாரும், மகிழினி, மைவிழி (மாணவிகள் யா/ மகாஜனாக் கல்லூரி), அர்ச்சயா (யா/வேம்படி மகளிர் கல்லூரி), ஐக்சயா, நிகில்ன், கவிசாலி, அதியவன் ஆகியோரின் அன்புப்பேரனும், காலஞ்சென்ற குமாரசாமி, ராசரத்தினம் மற்றும் சுசிலாதேவி, காலஞ்சென்ற விஜயகாந்தன் மற்றும் விமலகாந்தன், மைதிலி, மதனகாந்தன் காலஞ்சென்ற லவக்குமார் (உத்தமன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.06.2025) திங்கட்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அன்னாரது இல்லமான தமிழ் இல்லம் குறும்பன்வளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**குறும்பன் வளவு,**
**ஏழாலை மேற்கு,**
**ஏழாலை**

**தகவல் : குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.06.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.